## தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி இணக்கமாக உள்ளது!

# ஆட்சியில் பங்கு - தமிழ்நாட்டிற்கு ஒத்து வராது!

## ‘இந்தியா டுடே’ விற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பேட்டியில் உறுதி!

சென்னை, பிப். 13 –

சென்னையில் ‘இந்தியா டுடே’ சார்பில் நடைபெற்ற ‘Tamil Nadu Round Table’ நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேட்டியளிக்கையில் “தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி இணக்கமாக உள்ளது என்றும் “ஆட்சியில் பங்கு என்பது தமிழ்நாட்டிற்கு ஒத்து வராது” என்றும் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.2.2026) சென்னையில், INDIA TODAY சார்பில் நடைபெற்ற TAMIL NADU ROUND TABLE நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அளித்த பேட்டி வருமாறு:




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2026) சென்னையில், INDIA TODAY சார்பில் நடைபெற்ற TAMIL NADU ROUND TABLE நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மூத்த பத்திரிகையாளர் ராஜ்தீப் சர்தேசாய் அவர்களுக்குப் பேட்டியளித்தார்.

**செய்தியாளர்:** Confidence is coming from the schemes that you have brought in place, the welfare schemes, the fact that you said Tamil Nadu is now No.1 when it comes to growth rate. Is there a Dravidian Model 2.0 that you are bringing?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** Absolutely! No doubt!

**செய்தியாளர்:** *கடந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்திய உங்களுடைய திட்டங்களைச் சொல்லி அதன் மூலமாக நீங்கள் வாக்குகளைக் கேட்கிறீர்களா?*

**மு.க.ஸ்டாலின்:** Definitely. எங்கள் திட்டங்களை சொல்லித்தான் நாங்கள் வாக்குகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அனைத்துத் திட்டங்களும் முழுவதுமாக மக்களிடம் சென்று சேர்ந்திருக்கிறது. அதனால், கண்டிப்பாக நாங்கள் வெற்றி பெறப் போகிறோம். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை. 200ஐ யும் தாண்டி வெற்றி பெறுவோம்!

**செய்தியாளர்:** Are you worried about your opponents at all? Who is your main opponent?

**மு.க.ஸ்டாலின்:** எத்தனை கூட்டணி வைத்தாலும் சரி, இந்த திமுக தலைமையில் இருக்கின்ற கூட்டணியை எதிர்த்து வெற்றி பெற முடியாது. நாங்கள் எதிர்பார்ப்பது 200. அதையும் தாண்டித்தான் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**செய்தியாளர் :** *2021 தேர்தலை விட இந்தத் தேர்தல் மிகக் கடினமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?*

**மு.க.ஸ்டாலின்:** இல்லை, கண்டிப்பாக ஸ்வீப் செய்யப் போகிறோம். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை.

**செய்தியாளர்:** You are saying you will do better in 2026 than you did in 2021?

**மு.க.ஸ்டாலின்:** 2021–இல் செய்யப் போகிறோம் என்று சொல்லி வாக்கு கேட்டு வந்தோம். நிறைய சாதனைகளை தற்போது செய்திருக்கிறோம். செய்திருப்பதை சொல்லி இப்போது ஓட்டு கேட்கப் போகிறோம். அதனால், கண்டிப்பாக அதைவிட அதிகமாக தான் வாக்குகள் பெறுவோம்.

### கலைஞரிடம் கற்றுக் கொண்டது உழைப்பு, உழைப்பு, உழைப்பு!

**செய்தியாளர்:** *கலைஞர் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரைப்பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? தந்தையிடம் கற்றுக்கொண்டது என்ன? உங்கள் மகனிடம் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** கலைஞரிடம் கற்றுக் கொண்டது உழைப்பு, உழைப்பு, உழைப்பு. அவரிடம் இருந்து பலவற்றைக் கற்றுக் கொள்ள முடியும். உழைப்பை மட்டும் அவரிடம் இருந்து நான் கற்றுக்கொண்டேன். அந்த உழைப்புத்தான் என்னுடைய மகன் உதயநிதிக்கும் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்படிதான் வர வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

**செய்தியாளர்:** *ஒரு நல்ல பொலிட்டிஷியனாக இருக்க வேண்டும் என்றால் கடின உழைப்பு மட்டும் தான் வேண்டுமா?*

**மு.க.ஸ்டாலின்:** நிச்சயம் உழைப்புதான். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை. எதையும் எதிர்பார்க்காமல் உழைத்தால்தான் அரசியலில் முன்னுக்கு வர முடியும். எதையாவது எதிர்பார்த்து அரசியலுக்கு வந்து உழைத்தோம் என்றால் முடியாது. யார் காலிலாவது விழுந்து அதனால் முன்னுக்கு வருவது என்பது நடக்காது. உழைத்தால்தான் முன்னுக்கு வர முடியும். அப்படி உழைத்துத்தான் நான் வந்திருக்கிறேன்.

**செய்தியாளர் :** *திராவிடக் கொள்கை உங்கள் அரசியலுக்கு எவ்வளவு முக்கியம் என்று நினைக்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** பெரியாருடைய கொள்கை, அதைத் தொடர்ந்து அண்ணாவுடைய இலட்சியம், கலைஞருடைய பாதை, இது தான் எனக்கு முக்கியம். அதனால், திராவிட மாடல் ஆட்சியை நாங்கள் நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

**செய்தியாளர்:** *ராகுல்காந்தி அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும், உங்களுக்குமான உறவு குறித்து?*

**மு.க.ஸ்டாலின்:** ராகுலைப் பொறுத்தவரைக்கும் அரசியலைத் தாண்டி, ஒரு மூத்த சகோதரராக என்னைப் பார்க்கிறார். நானும் அவரை சகோதரராகத்தான் பார்க்கிறேன். அரசியலைத்தாண்டி சொல்கிறேன். குடும்பத்தில் ஒருவர் போன்று என்னை அவர் கருதுகிறார். நானும் அப்படித்தான் கருதுகிறேன்.

**செய்தியாளர்:** *தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி இணக்கமாக இந்தத் தேர்தலில் இருக்குமா?*

**மு.க.ஸ்டாலின்:** நிச்சயமாக இருக்கும். மற்றவர்கள் நினைப்பது போன்று இல்லை. உங்களைப் போன்ற மீடியாக்கள் செய்யும் பிம்பங்கள் அது. நாங்கள் நன்றாக இருக்கிறோம்.

### கூட்டணியில் முறிவு ஏற்படுத்த சதி!

**செய்தியாளர்:** *ஆட்சியில் பங்கு குறித்து...*

மு.க.ஸ்டாலின்: அது தமிழ்நாட்டிற்கு ஒத்து வராது என்பது எங்களுக்கும் தெரியும். அவர்களுக்கும் தெரியும். அது இடையில் சில பேர் கிளப்பிவிடும் பிரச்சினை. கூட்டணியில் ஏதேனும் முறிவு ஏற்படுமா.. என்று திட்டமிட்டு சதி செய்கிறார்கள். அதைப்பற்றி நாங்களும் கவலைப்படவில்லை. அவரும் கவலைப் படவில்லை.

### நிதி வரவில்லையென்றாலும் முதலிடத்தில் தமிழ்நாடு!

**செய்தியாளர்:** *எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நீங்கள் எப்போதும் ஆதரவாக இருந்திருக்கிறீர்கள். ஒன்றிய அரசிடமிருந்து உங்களுக்கு வரவேண்டிய நிதிகள் ஏதும் வரப் பெறவில்லையே? அது குறித்து?*

**மு.க.ஸ்டாலின்:** நிதி வரவில்லையென்றாலும் அதைச் சமாளித்து தமிழ்நாடு இன்றைக்கு முதலிடத்திற்கு வந்திருக்கும் அளவிற்கு சூழலை உருவாக்கியிருக்கிறோம். அதற்காகப் போராடுகிறோம். வாதாடுகிறோம். போராட்டங்கள் நடத்துகிறோம். ஆர்பாட்டங்கள் நடத்துகிறோம். நாளை கூட இதைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்த இருக்கிறோம். அதனால், எங்களுடைய கோரிக்கைகளை தொடர்ந்து சொல்லிக் கொண்டுதான் இருப்போம். அதற்காக எங்களுடைய பணிகளை விட்டுவிடமாட்டோம். அதையும் வெற்றிகரமாக செய்து கொண்டிருக்கிறோம். அதுதான் எங்களுடைய திறமை. எங்கள் ஆட்சியின் திறமை.

### உரிமைக்கு குரல் கொடுப்போம்! உறவுக்கு கை கொடுப்போம்!

**செய்தியாளர்:** *ஒன்றிய அரசிற்கும் - பிரதமர் மோடி அவர்களுக்கும் - உங்களுக்குமான உறவு குறித்து?*

**மு.க.ஸ்டாலின்:** *தலைவர் கலைஞர் அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார். உரிமைக்கு குரல் கொடுப்போம். உறவுக்கு கை கொடுப்போம். அந்த பாலிசி தான் எங்களுக்கு உண்டு.*

**செய்தியாளர்:** Thank you so much for joining us. Please give a warm round of applause to the Chief Minister.

**மு.க.ஸ்டாலின்:** Thank you.

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.*

---

## அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் – விக்கிரவாண்டி தொகுதி அன்னியூரில்

# அன்பகம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைக்கிறார்!

### முனைவர் க.பொன்முடி – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் –பொன்.கௌதமசிகாமணி பங்கேற்பு!

விழுப்புரம், பிப்.13 -

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி அன்னியூரில் அன்பகம் திறப்பு விழா இன்று (13.2.2026 - வெள்ளிக்கிழமை) முற்பகல் 12:30 மணி அளவில் நடைபெறுகிறது.

விழாவிற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி முன்னிலை வகிக்கிறார்.

காணை மத்திய ஒன்றியச் செயலாளர் ஆர்.பி.முருகன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு கழகக் கொடியை ஏற்றி வைத்து சிறப்பிக்கிறார்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய அன்பகத்தை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

இவ்விழாவில் மா.ஜெயச்சந்திரன், டி.என்.முருகன், இரா.கற்பகம், டி.செல்வராஜ், மு.அப்துல் சலாம், சுவை.சுரேஷ், எம்.தேன்மொழி, என்.கலைச்செல்வி, சங்கீத அரிசி ரவி துரை, கல்பட்டு வி.ராஜா, ஆர்.முருகன், வேம்பி ஜே.ரவி, ஜெய. ரவிதுரை க.மும்மூர்த்தி, ஜெ.ஜெயபால், வே.கில்பர்ட் ராஜ், எல்ஏஎம். நைனா முகம்மது, மு.தங்கம், ஜி.ரவிச்சந்திரன், பிவிஆர் சு. விசுவநாதன், ஆர்.சுந்தரமூர்த்தி, கை.ரா.சடகோபன், எஸ்.ஜான் லூயிஸ், பூக்கடை கணேசன், கு.ஓம்சிவ சக்திவேல், தனலட்சுமி உமேஸ்வரன், கே.சிவகுமார், மீனா வெங்கடேசன், த.வீரராகவன், ச.பாலாஜி, ஜீவிதா ரவி, சரசு தேவராசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக அன்னியூர் கிளைக் கழகச் செயலாளர்கள் ஆர்.கார்த்தி, ஆர்.சண்முகம், எஸ்.சிவபெருமான் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

விழா ஏற்பட்டினை விவசாயத் தொழிலாளர் அணி மாநிலச் செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. சிறப்பாக செய்துள்ளார்.

---

## வடகாடு ஊராட்சியில் ரூ.4.61 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்!

### அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்!

ஒட்டன்சத்திரம், பிப்.13 –

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியம் வடகாடு ஊராட்சி பகுதியில் அங்கன்வாடி மைய கட்டிடம், சமுதாயக்கூடம், பள்ளி கட்டிடம் புனரமைத்தல், நியாய விலைக் கடை, புதியபாலம், பயணியர் நிழற்குடை, சாலை மேம்பாட்டு பணிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல் உள்ளிட்ட ரூ.4.61 கோடி மதிப்புள்ள முடிவுற்ற திட்டப்பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்வில் கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர் சஞ்சய் காந்தி, கலைஞர் வீடுகள் திட்ட அலுவலர் பிரபாகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், பிரபு பாண்டியன், மாவட்ட வழங்கல் அலுவலர் அன்பழகன், ஒன்றியச் செயலாளர் பாலு, துணைச் செயலாளர் சிவக்குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அசோக் வேலுச்சாமி, மணிபாரதி, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் சந்தோஷ்குமார்,

முன்னாள் ஒன்றியக் கவுன்சிலர் ராமராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி, முன்னாள் துணை தலைவர் பிரபாவதி, ஊராட்சி செயலாளர் சிவக்குமார், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் வட்டம் கோவிந்தம்மாள் ஆதித்தனார் கல்லூரியில் நடைபெற்ற ‘உலகம் உங்கள் கையில்’ மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை தொடங்கி வழங்கி வரும் தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் வழங்கினார். நிகழ்வில் கல்லூரி செயலாளர் நாராயணன், கோவிந்தம்மாள் கல்லூரியின் முனைவர் ஜான்சி ராணி, நகர்மன்ற தலைவர் சிவ ஆனந்தி ரமேஷ், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை. மூ.ராமஜெயம், நகரச் செயலாளர் வாள் சுடலை மற்றும் கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.




மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பாக சேடபட்டி தெற்கு ஒன்றியம் அத்திப்பட்டியில் நடைபெற்ற ‘தமிழ்நாடு தலை குனியாது’ மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா எம்.பி., தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன் முன்னிலையில் சிறப்புரை ஆற்றினார். மேலும் இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் சங்கர பாண்டியன், ஜெயச்சந்திரன், எஸ்.ஓ.ஆர். தங்கபாண்டியன், சுதாகரன், செல்வ பிரகாஷ், ஜெயராமன், செல்லம்பட்டி முத்துராமன், அஜீத் பாண்டி, முருகன், பழனி, தொகுதி பொறுப்பாளர்கள் செல்லத்துரை, டிஸ்கோ அலாவுதீன், இளைஞர் அணி விமல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.